KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 17.04.2012

| Date of the Council Meeting | Decision Number | Subject of the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 17.04.2012 | 198 | **பொருள் எண் 1**<br>காயல்பட்டணம் நகராட்சியாது தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள இரண்டாம் நிலை நகராட்சியாகும் 2011 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 40542 ஆகும் இந்நகராட்சி 12.50 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை கொண்டது நகராட்சியினுடைய அலுவலக கட்டிடம் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம் ஆகும் தற்பொழுது அக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. தற்பொழுது அக்கட்டிடத்தில் தான் நகர்மன்ற கூட்டம் நடைபெற்று வருகிறது. எனவே பழுதடைந்த மிகவும் மோசமான நிலையில் உள்ள அலுவலக கட்டிடத்தை அகற்றிவிட்டு ஒருங்கிணைந்த நகர்புறம் மேம்பாட்டுக்குழுமம் (IUDM)திட்டத்தின் கீழ் முழு அரச மானியத்துடன் அலுவலக கட்டிடம் கட்ட விரிவான திட்டம் மதிப்பீடு தயாரித்து பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 1<br>காயல்பட்டணம் நகராட்சியில் IUDM திட்டத்தின் கீழ் புதிய நகர்மன்ற கட்டிடம் கட்ட மதிப்பீடு தயாரித்து நகராட்சி நிர்வாக துறையிடம் சமர்ப்பிக்க மன்றம் அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது |
| | 199 | **பொருள்எண் 2**<br>காயல்பட்டணம் நகராட்சி பாத்தியப்பட்ட கடைகள் இதர உரிமங்கள்/குத்தகைகள் மூலம் கிடைக்கபெறும் வருவாய் உண்மையான சந்தை விலையை விட தற்போது மிகவும் குறைவாகவே உள்ளது. ஆகவே காயல்பட்டணம் நகராட்சியின் கட்டிடங்களில் அமைந்துள்ள கடைகளின் குத்தகை குறித்தும் மற்றும் இதர சேவைகளுக்கும் உரிமங்கள் வழங்க ஏலம் விடுவது குறித்தும் முடிவெடுப்பது<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 2<br>1.காயல்பட்டணம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பேருந்து நிலைய மற்றும் வணிக வளாக கடைகளின் குத்தகைகாரர்களிடம் தற்போது சந்தை விலையைவிட வாடகை குறைவாக பெறப்படுவதால் வாடகையை உயர்த்தி வழங்கிட கோரிக்கை வைக்கவும் அவ்வாறு வழங்காத பட்சத்தில் அக்கடைகளை மீண்டும் பொது ஏலத்தில் விடவும் மன்றம் அனுமதி வழங்குகிறது<br>2. நகராட்சியின் இதர பொருட்கள்/சேவைகளுக்கான ஏலத்தினை உடனடியாக நடத்திட மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 200 | **பொருள் எண் 3**<br>புதிய பேருந்து நிலையத்திலுள்ள வணிக வளாகத்தில் கட்டண கழிப்பறை இயங்கி வருகிறது. அதில. ஆண்களுக்கு மட்டும் கழிப்பிட வசதி உள்ளது. பெண்களுக்கு கழிப்பிட வசதி இல்லாமல் உள்ளது. இதனால் பேருந்து நிலையத்திற்கு வரும் பெண்பயணிகள் கழிப்பிட வசதியின்றி மிகவும் சிரமப்படுகிறார்கள் புது பேருந்து நிலைய வணிக வளாகத்தில் இயங்கிவரும் கட்டண கழிப்பிடத்தை மூடிவிட்டு பேருந்து நிலைய ரேசன் கடைக்கு அருகில் புதியதாக கட்டப்பட்ட வாரியார் கழிப்பிடத்தை சீர் செய்து இரண்டாக பிரித்து ஆண்கள் பெண்களுக்கு என தனித்தனி கழிப்பிட வசதி செய்து கொடுக்கவும் பின் அதனை பொது ஏலம் விடுத்து நகராட்சியின் வருவாய்க்கு வழிவகுப்பது சம்பந்தமான கோரிக்கையை மன்றம் அனுமதிக்கவும் மேலும் பழைய கழிப்பிட்த்தை ரிப்பேர் பார்த்து இரண்டு கடையாக மாற்றவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 3<br>1.பேருந்து நிலையத்தில் கடைக்கு அருகில் உள்ள ஒன்றுபட்ட சுகாதார மைய கழிப்பிடங்களின் புனரமைப்பு பணிகள் முடிவடைந்த பின் அதனை பராமரிக்கும் பணியினை பொது ஏலம் விடுவது என மன்றம் முடிவு செய்கிறது.<br>2. வணிக வளாகத்தில் இயங்கிவரும் கட்டண கழிப்பிடத்தை மூடிவிட்டு அவ்விடத்தில் நகர்மன்றத்திற்கு வாடகை தரும் விதமாக இரு கடைகள் கட்டிட மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 201 | **பொருள் எண் 4**<br>கடற்கரையை பயன்படுத்தும் பொது மக்களின் ஆதரவு இல்லாத காரணத்தால் கடந்த காலங்களில் கடற்கரை சைக்கிள் ஸ்டாண்டினை குத்தகைக்கு விடுத்து அதனால் நகராட்சிக்கு எவ்விபலனும் ஏற்படவில்லை என்பதனை கருத்தில் கொண்டு சைக்கிள் ஸ்டாண்டினை குத்தகைக்கு விடவேண்டாம் என முடிவு செய்யப்படுகிறது. மேலும் வாகனங்களை முறையாக நிறுத்தும் வேலையினை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் கடற்கரையில் மேற்கொள்வது எனவும் முடிவு செய்யப்படுவது மன்றத்தின் பார்வைக்கு<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம் | பொருள் எண் 4<br>கடற்கரை சைக்கிள் ஸ்டாண்டினை குத்தகைக்கு விடவேண்டாம் எனவம் வாகனங்கள் நிறுத்தும் வேலையினை தன்னார்வத்தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நகராட்சியே மேற்கொள்ளும் எனவும் தீர்மானிக்கப்பட்டது |
| | 202 | **பொருள் எண் 5**<br>நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகளை வருவாய் உதவி ஆய்வாளர் உதவியுடன் மறு அளவீடு செய்து மண்டல வாரியாக பிரித்து சரியான முறையில் முறையாக அளவில் வரி விதிப்பு செய்ய நடவடிக்கை எடுக்க மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 5<br>நகரளவில் மறு அளவீடு செய்ய தற்போது அவசியம் இல்லை என மன்றம் தீர்மானிக்கிறது |

| | | | |
|---|---|---|---|
| | 203 | **பொருள் எண் 6**<br>நகராட்சி பகுதியிலுள்ள கடைகளுக்கு மற்றும் வணிக வளாகங்களுக்கு இதுவரை சரியான முறையில் தொழில் வரி வசூலிக்கப்படவில்லை அதை 2011-2012 -ம் ஆண்டு முதல் தொழில் வரிமுறையாக வசூலிக்க நடவடிக்கை எடுப்பது மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 6<br>நகராட்சி பகுதிகளிலுள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு முறையாக தொழில்வரி வசூலிக்க மன்றம் தீர்மானித்தது.<br>தொழில்வரிகட்ட வேண்டியவர்களின் பட்டியலை |
| | 204 | **பொருள் எண் 7**<br>தொலைபேசி அலுவலகம் மூலம் சாலைகளில் கேபிள் பதிப்பு செய்வதற்கு உரிய வருடாந்திர வாடகை வசூலிப்பது சம்பந்தமாகவும் ரோடு கட்டிங் பண்ணுவதற்குரிய கட்டணம் வசூல் செய்வது சம்பந்தமாகவும் அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கு<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 7<br>தொலைபேசி அலுவலகம் மூலம் சாலைகளில் கேபிள் பதிப்பு செய்வதற்குரிய வருடாந்திர வாடகை வசூலிக்கவும் ரோடு கட்டிங்பண்ணுவதற்குரிய கட்டண வசூல் செய்யவும் இது குறித்து முறையான தகவல் தந்து வரி வசூல் நடவடிக்கை எடுக்க மன்றம் தீர்மானித்தது. கேபிள் டி.வி.நிறுவனர்களிடம் ஆண்டு கட்டணமாக வசூல் செய்ய மன்றம் தீர்மானீத்தது |
| | 205 | **பொருள் எண் 8**<br>நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அலைபேசி கோபுரங்களுக்கு ஆண்டு வரி வசூலிப்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 8<br>அலைபேசி கோபுரங்கள் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் காலியிடங்களின் உரிமையாளர்களிடம் இதுவரை பாக்கியுள்ள ஆண்டு கட்டணங்களை வசூல் செய்ய மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 206 | **பொருள் எண் 9**<br>நகராட்சி பகுதிகளில் காலியாக உள்ள இடங்களுக்கு காலிமனை வரி வசூலிப்பது சம்பந்தமாக மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 9<br>இது குறித்து ஆவண செய்ய மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 207 | **பொருள் எண் 10**<br>நகராட்சியில் பகுதியில் வைக்கப்படும் விளம்பர பலகைகளுக்கு நகராட்சியின் முன் அனுமதி பெறவும் அதற்குரிய தனி கட்டண வரி செலுத்தவும் ஆணையிடுவது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பது மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 10<br>நகராட்சி பகுதியில் வைக்கப்படும் விளம்பர பலகைகளுக்கு நகராட்சியின் முறையான அனுமதி பெற்று வைத்திடவும் அதற்குரிய தனி கட்டண வரி செலுத்தவும் நடவடிக்கை எடுக்க மன்றம் தீர்மானித்தது |
| | 208 | **பொருள் எண் 11**<br>நகராட்சி பகுதியில் பிளாஸ்டிக் கேரி பேக்குகள் தடை செய்யப்பட்டுள்ள நிலையில் மீண்டும் பிளாஸ்டிக் கேரி பேக்குகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது ஆகவே இதன் தரத்தினை ஆராய (மைக்ரான அளவுகளை கண்டறிய கருவி) வாங்க அதன் தோராயம் மதிப்பு ரூ. 3000/- மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 11<br>தோராய மதிப்பீட்டின்படி மைக்ரான் அளவுகண்டறியும் கருவியினை விலைப்புள்ளிகள் பெற்று வாங்க மன்றம் அனுமதி வழங்கியது |
| | 209 | **பொருள் எண் 12**<br>நகரில் புது வீடு கட்டும் போது வீடு கட்ட தேவையான ஜல்லி மணல் கல் போன்றவற்றை தெருவில் கொட்டி பொதுமக்களுக்கு இடையூறு செய்யும் நபர்களின் மீது நடவடிக்கை எடுக்கவும் பிளான் அப்ருவல் பண்ணும் போதே அது குறித்து தெளிவாக நடைமுறை சட்ட திட்டங்களை அறிவித்து ஒப்புதல் வாங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 12<br>ஜல்லி மணல் கல் போன்றவற்றை தெருவில் கொட்டி பொதுமக்களுக்கு இடையூறு செய்யும் நபர்களின் மீது நடவடிக்கை எடுக்கவும் அதற்கு முன்பாக அது பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தவும் பிளான் அப்ருவல் பண்ணும்போது அது குறித்து தெளிவாக நடைமுறை சட்ட திட்டங்களை அறிவித்தல் ஒப்புதல் வாங்கவும் சட்ட திட்டங்களை முறையாக அறிவித்து ஒப்புதல் வாங்கவும் சட்ட திட்டங்களை முறையாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதிக்கிறது |
| | 210 | **பொருள் எண் 13**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான சாலைகளில் போடப்படும் விஷேச பந்தல்களுக்கு உரிய கட்டணம் உரிய விதிமுறைகளின்படி வசூல் செய்ய நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 13<br>நகராட்சிக்கு சொந்தமான சாலைகளில் போடப்படும் விஷேச பந்தல்களுக்கு முன்கூட்டியே அனுமதி பெற்று அதற்குரிய கட்டணத்தை செலுத்தி உத்தரவிடவும் உரிய விதிமுறைகளின்படி வசூல் செய்யவும் நடவடிக்கை எடுக்க மன்றம் தீர்மானித்தது |